27.11.2025

O.S.No. 415/2021

DW1– பார்வதி – க/பெ. பிச்சையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( 7ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் சுப்பையாத்தேவர் மகன் சண்முகையாத்தேவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். நான் சண்முகையாத்தேவரின் அதிகாரம் பெற்ற முகவரிடம் இருந்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் சண்முகையாத்தேவரின் குடும்பத்திடம் விசாரித்துவிட்டுதான் கிரையம் வாங்கினேன். சுப்பையாத்தேவரின் வாரிசு சான்றை நான் பார்க்கவில்லை.

2. சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கத்தை பார்த்தேன், ஆனால் அந்த ஆவணம் தற்போது என் கைவசம் இல்லை. வில்லங்கத்தை பார்த்திருந்தால் 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கியவிவரமும், 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கிய விவரமும் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் 2006ம் ஆண்டுதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. சுப்பையாத்தேவருக்கு எத்தனை குழந்தைகள் என்றவிவரம் தெரியாது என்றால் சரியல்ல. சுப்பையாத்தேவருக்கு சண்முகையாத்தேவர், வேலுச்சாமித்தேவர் என்ற 2 வாரிசுகள் உண்டு என்றால் சரியல்ல, 7ம் பிரதிவாதி கூறும் சுப்பையாத்தேவர் சங்கரலிங்கத்தேவரின் வாரிசு, நான் கூறும் சுப்பையாத்தேவரின் தந்தைபெயர் சண்முகையாத்தேவர். இது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான உரம் அட்டை 1975 ல் வாங்கப்பட்டது. அது சுப்பையாத்தேவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

4. பழைய பட்டாவில் 7 ம் பிரதிவாதியும், 6 ம் பிரதிவாதியின் பெயரும் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை அனுபவம் செய்ததை காட்டக்கூடிய ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான், அந்த சமயத்தில் நான் சென்னையில் இருந்தேன்.

5. 1ம் தபசில் சொத்தை சுப்பையாத்தேவரின் வாரிசுகளான சண்முகையாத்தேவர், வேலுச்சாமித்தேவர் அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல. சண்முகையாத்தேவர் 2005 ம் ஆண்டு தூத்துக்குடியில் குடியிருந்துவந்தார் என்றால் சரியல்ல, ஊத்துமலையில் குடியிருந்து வருகிறார்.

6. 04.05.2005 தேதியில் சண்முகையாத்தேவரும், முருகன், முத்தையாத்தேவரும் கூட்டாக புலியுடையான் மனைவி பார்வதி என்பவருக்கு 1ம் தபசில் சொத்தை பொறுத்து பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தாக சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் பார்வதி என்பவர் 7 ம் பிரதிவாதிக்கு 24.06.2005 தேதியில் 1ம் தபசில் சொத்தை பொறுத்து ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார், மேற்படி பத்திரம் ஊத்துமலை சார்பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதிலுள்ள பார்வதி வேறு, நான் வேறு. எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் யாரும் மேற்படி கிரையதாரர்கள் கிடையாது. நான் வில்லங்கமே பார்க்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 1ம் தபசில் சொத்திலுள்ள 1 ஏக்கர் சொத்தை 7ம் பிரதிவாதி 30.12.2005ல் 6ம் பிரதிவாதிக்கு ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது மோசடியான ஆவணம். நான் 2006ல் கிரையம் வாங்குவதற்கு முன்பே மேற்படி கிரையங்கள் ஏற்பட்டுவிட்டது என்றால் மோசடியானவை. நான் கிரையம் பெற்ற ஆவணம் மோசடியான ஆவணம் என்றாலும், நான் முறையான கிரையதாரர்களிடம் இருந்து கிரையம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

8. 2ம் தபசில் சொத்தை பொறுத்து 2005ம் ஆண்டிலே கிரையம் ஆகிவிட்டது என்றால் அவை தவறான உரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றவை. நான் தபசில்சொத்தை 2024, ஆகஸ்ட் மாதம் பார்த்தேன். நான் வெளியூரில் வசித்துவருகிறேன், எனதுசொந்த ஊர் வெகுதொலைவில் இருப்பதால் தபசில் சொத்தை என்னால் அடிக்கடி சென்று பார்க்கமுடியாது.

9. **நீதிமன்ற கேள்வி –** நான் 2006ல் பிராதுதபசில்சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்திருந்தேன், மேற்படி வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்தபின்பு நான் தபசில்சொத்தை மீண்டும் ஆகஸ்ட், 2024ல் தான் பார்த்தேன்.

10. தபசில் சொத்தில் காற்றாலை உள்ளதா என்றால் சொத்தை அளந்து பார்த்தால் தான் தெரியும். அங்கு ஒரு காற்றாலை உள்ளது, அது என் இடத்தில் உள்ளதா என்று தெரியாது. வழக்கு நிலுவையில் இருப்பதால் நான் ஸ்தலத்தைஅளக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

11. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.94/2006 வழக்கில் இந்த வழக்கு 6,7 ம் பிரதிவாதி கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, 7 ம் பிரதிவாதி எனது தரப்பினராக இருந்தார். நான் வழக்கு தொடுத்ததாக சொல்லும் 7 ம் பிரதிவாதி சுஸ்லான் நிறுவனம். ஆனால் இந்த வழக்கு 7 ம் பிரதிவாதி சுப்ரியாலிட்டி சௌத் பிரைவேட் லிமிட் என்றால் இரண்டும் ஒரே நிறுவனம் தான். இவைஇரண்டும் ஒரே நிறுவனம் என்று எனது எதிருரையிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.94/2006 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் இது துலங்கும்.

12. சுஸ்லான் நிறுவனமும், இந்த வழக்கு 7 ம் பிரதிவாதி நிறுவனமும் வேறு வேறு நிறுவனங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 6 ம் பிரதிவாதி நிறுவனம் தபசில் இடத்தில் 2006 ம் ஆண்டு, மார்ச் மாதம் காற்றாலையிலிருந்து மின்உற்பத்தி தொடங்கிவிட்டது என்றால் சரியல்ல. நான் சுஸ்லான் நிறுவனத்தின் ஒருஇயக்குநரான நிலேஷ்பாய் பேசியதில் அவர் உறுதியளித்து வரமாட்டேன் என அலைபேசியில் உறுதியளித்தார். அவரை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. நான் நேரிலும்,தொலைபேசி மூலமும் பேசியுள்ளேன். மேற்படி நிலேஷ்பாய் நான்

வள்ளியூரில் உள் அவர்களது நிறுவனத்தில்வைத்து பார்த்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. நான் சொத்திற்கு சம்பந்தமில்லாத 3ம் நபரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் தபசில்சொத்தில் எந்தவித உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. 1974ம் பாகப்பிரிவினை பற்றி நேரடியாக தெரியுமா என்றால் அவரது வாரிசுகள் மூலமாகதான் தெரியும், நேரடியாக தெரியாது. நான் முறையான நபர்களிடம் இருந்து கிரையம் வாங்கியிருந்தால் பட்டாவில் எனதுபெயரை சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.